Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 2 26-5-1985 ஞாயிற்றுக்கிழமை (வைகாசி 13 ரம்ழான் 5) முழக்கம் 110

## ஜனாதிபதி தலைமை பாதுகாப்பு கூட்டுக் கவுன்ஸில் பிரகடனம்!

பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கான ஜனாதிபதி ஜெயவர்த்தன தலைமையில் உருவாக்கப்பட்ட பாதுகாப்பு கூட்டு கவுன்ஸில் வர்த்தமானி மூலம் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. பல்வேறு நிறைவேற்று அதிகாரங்களையும் கொண்ட இக்கவுன்ஸிலில் பிரதமர், தேசிய பந்தோபஸ்து அமைச்சர், அவரது அமைச்சின் செயலாளர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். கூட்டுப் படைகளின் தலைமைத் தளபதி, முப்படைத் தளபதிகள், ஐ ஜி பி ஆகியோர் கவுன்ஸிலின் அனுமதியுடன் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் அதிகாரங்கள் பெற்றவர்களாக விளங்குவர்.

# கொழும்பின் பிரதான பகுதிகளில் வீடுவீடாக சோதனை; சுமார் இருநூறு தமிழ் இளைஞர் கைது!

கொழும்பு மாநகரின் தமிழ் மக்கள் அதிகமாக வாழும் பகுதிகள் நேற்று அதிகாலை முதல் பொலிஸ், ராணுவ கூட்டுப் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு ஒவ்வொரு வீடும் சோதனையிடப்பட்டதை அடுத்து, சுமார் இருநூறுபேர் சந்தேகத்தின் பேரில் மேல் விசாரணைக்காக கொண்டு செல்லப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

வெள்ளவத்தை, பாமன் கடை, பம்பலப்பிட்டி, கொட்டாஞ்சேனை பகுதிகளே கூடுதலாகச் சோதனையிடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

நேற்று அதிகாலை ஐந்து மணியளவில் ஆரம்பமான இச்சோதனை காலை சுமார் பத்துமணி வரை நடைபெற்றது. வாக்காளர் பட்டியல், உணவு இலாகா பட்டியலுடன் வீடுகளில் இருந்தவர்களின் பெயர் விபரங்கள் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டதாகவும். அச்சமயம் வீடுகளில் தங்கியிருந்த வெளியூர் வாசிகள் கைதானதாகவும் தெரியவந்துள்ளது.

வெளிநாடு செல்வதற்காகவும், பாஸ்போர்ட் போன்ற அத்தியாவசிய தஸ்தாவேஜுகளைப் பெறுவதற்காகவும்

– 4-ஆம் பக்கம் பார்க்க

# அமைச்சர் லலித் நிபந்தனைகளை 4 இயக்கம் கூட்டாக நிராகரிப்பு!

## தமிழருக்கான சுயநிர்ணய அமைப்பைவிட வேறெதையும் ஏற்கமுடியாதென அறிவிப்பு

(சென்னை)

பிரிவினையை முறியடிப்பதற்கு தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலி கடந்த செவ்வாய்க்கிழமை விதித்த சகல நிபந்தனைகளையும் நிராகரித்து முக்கியமான நான்கு இளைஞர் இயக்கங்கள் சென்னையில் அறிக்கை வெளியிட்டுள்ளன.

அமைச்சரால் விதிக்கப்பட்ட எந்த நிபந்தனையையும் ஏற்றுக்கொள்ள முடியாதென விடுதலைப்புலிகள், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈரோஸ் ஆகிய நான்கு இயக்கங்களின் தலைவர்களும் ஒப்பமிட்டு இவ் அறிக்கையை வெளியிட்டுள்ளதாக சென்னையிலிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையின் தேசிய கீதம், தேசியக் கொடி, பௌத்த மதம் ஆகியவற்றை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும், தேசிய ஒருமைப்பாடு பாதுகாக்கப்பட வேண்டுமென்றும், இதற்காக எட்டு அம்சத் திட்டம் தயாரென்றும் தெரிவித்திருந்த அமைச்சர் அத்துலத்முதலி, தீவிரவாத இளைஞர்கள் பிரிவினைக்குப் பதிலாக அரசியல் தீர்வொன்றிற்கு இணங்க வேண்டும் எனவும் அறிவித்திருந்தார்.

"இந்த நிபந்தனைகளை ஏற்பதானது எந்த நோக்கத்துடன், எந்தக் கொள்கைக்காகப் போராடுகின்றோமோ அதற்கு விரோதமானது" என்று தெரிவித்த இயக்கத் தலைவர்கள் தமிழ் மக்களுக்கான சுயநிர்ணய உரிமையைப் பெறுவதே தமது நோக்கமெனவும் குறிப்பிட்டுள்ளனர்.

### கண்காட்சித் தண்டனை

(உடுப்பிட்டி)

அடுத்தடுத்து மரண தண்டனைகள் வழங்கப்பட்ட நெல்லியடி மகாத்மா தியேட்டர் அருகில் உள்ள கம்பத்தில் நேற்று முன்தினம் ஒருவருக்கு கண்காட்சித் தண்டனை வழங்கியது. உயிருடன் கட்டப்பட்டிருந்த இவருக்கு அருகில், கடதாசி அட்டையில் 'ரெலோ' இயக்கத்தின் பெயரைச் சொல்லி பெண்களை கற்பழித்த குற்றச்சாட்டுகள் இவர்மீது தெரிவிக்கப்பட்டிருந்தது.

### சவூதியிலிருந்து திரும்பிய

## ஏழு வடபகுதி இளைஞர்கள் 4-ம் திகதி வரை றிமாண்டில்

சவூதி அரேபியாவில் இருந்து நாடு திரும்பிய வட பகுதி இளைஞர்கள் ஏழுபேர் கடந்த சனிக்கிழமை வடக்கே வந்த லொறி மூலம் யாழ்ப்பாணம் வந்து கொண்டிருந்த போது குருநாகலில் வைத்து கைது செய்யப்பட்டு அடுத்த மாதம் நான்காம் திகதிவரை றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

அச்சுவேலி, வயாவிளான், கரவெட்டி ஆகிய இடங்களைச் சேர்ந்த இவர்கள் பயணம் செய்த லொறி குருநாகலில் நிலத்துள் புதைந்ததால் அவர்கள் பயணம் தொடரமுடியாமல் தத்தளித்தபோது, பயங்கரவாதிகள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டதாக தெரியவந்துள்ளது.

இவர்களைப் பற்றி மேலதிக விபரங்களை அறிந்து தகவல் அனுப்பும்படி குருநாகல் பொலிசார் யாழ்ப்பாணம் பொலிசாரை வேண்டியுள்ளனர்.

## இந்திய தூதுவர் டிக்ஸிற் இன்று கொழும்பு வருகிறார்

இலங்கையின் புதிய இந்தியத் தூதுவராக நியமிக்கப்பட்டிருக்கும் திரு. ஜே என். டிக்ஸிற் இன்று மாலை கொழும்பு வருகின்றார்.

இதுவரை ஆப்கானிஸ்தானில் இந்திய தூதுவராக இவர் கடமையாற்றி வந்தார்.

நாளை முற்பகல் ஜனாதிபதி ஜெயவர்த்தனவை சந்தித்து, தமது பதவி அறிமுகக் கடிதத்தை திரு. டிக்ஸிற் கையளிப்பாரென்று இந்திய தூதரக அதிகாரிகள் தெரிவித்தனர்.

### 'புளொட்' பிரசுர வேண்டுகோள்:

## இயக்கங்களின் ஒற்றுமையை வளர்த்தெடுக்க வேண்டும்!

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள், தமிழ் ஈழ விடுதலை இயக்கம், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, ஈழ புரட்சி அமைப்பு ஆகிய நான்கு இயக்கங்களும் ஒன்றாக இணைந்து செயற்படுவதைப் பாராட்டி "ஒன்றுபடுவோம்; வெற்றி காண்போம்" என்ற தலைப்பில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் பிரசுரமொன்றை வெளியிட்டுள்ளது.

1982-ம் ஆண்டில் இடம்பெற்ற இயக்கங்களுக்கு இடையேயான ஒற்றுமை முயற்சியிலும், பின்னர் 1983-ல் நடைபெற்ற ஒற்றுமை முயற்சிகளிலும் கழகம் மிகுந்த அக்கறையுடன் முன்னின்று பாடுபட்டதாகச் சுட்டிக்காட்டப்பட்டு

– 4-ஆம் பக்கம் பார்க்க

### சூறாவளியால் 40 பேர் மரணம்

பங்களாதேஷில் நேற்று முன்தினமிரவு வீசிய கடும் சூறாவளி காரணத்தால் சுமார் நாற்பது பேர் மரணமானார்கள். நூற்றுக்கணக்கான வீடுகள் தரைமட்டமாகின. கடலில் கட்டப்

– 4-ஆம் பக்கம் பார்க்க

### நிலாவெளி தாக்குதல்

## விமானப்படையின் உயர் அதிகாரி ஒருவர் ஸ்தலத்தில் பலி!

(திருமலை)

நிலாவெளியில் இரண்டு தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற நேரடித் தாக்குதலொன்றில் விமானப் படையின் அதிரடிப் பிரிவைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து விமானப் படையினர் ஒழித்திருந்து நடத்திய திடீர் தாக்குதலொன்றின் போது, பல தீவிரவாதிகள் காயமடைந்ததாகவும், ஒருவரது சடலம் மீட்கப்பட்டதாகவும் தேசிய பந்தோபஸ்து அமைச்சு அறிவித்துள்ளது.

நிலாவெளிப் பகுதிச் சம்பவங்களில் பொது மக்களில் எட்டுப்பேர் கொலை செய்யப்பட்டனர். கல்வி அதிகாரி ஒருவர், முன்னாள் பாடசாலை அதிபர் ஒருவரின் மகன் ஆகியோரும் மரணமானவர்களில் அடங்குவர்.

நில வெளிப் பகுதியிலிருந்து வீடுகளை விட்டு வெளியேறிய பலர் இன்னமும் திரும்பி வரவில்லை எனவும் தெரியவந்துள்ளது.

### ஒரு சம்பவம்

(திருமலை)

பன்குளம் பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சுமார் ஏழு பேர் நேற்று நடைபெற்ற சம்பவமொன்றில் மரணமாக நேர்ந்ததாகத் தெரியவந்துள்ளது.

### ஈழ அகதிகளுக்கு 3000 வீடுகள்

இந்தியா வந்து சேர்ந்துள்ள இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு மண்டபத்தை அடுத்துள்ள பகுதிகளில் சுமார் ஐந்நூறு வீடுகள் கட்டுவதற்கான அனுமதியை மத்திய அரசு வழங்கியுள்ளது. இந்த வீடுகள் அடுத்த இரண்டுமாத இடைவெ

—4-ஆம் பக்கம் பார்க்க

## யாழ். பொலிஸ் நிலைய வளவு வங்கிக் கிளைகள் நாளை திங்கள் முதல் இயங்கும்

குருநகரில் மூடப்பட்ட சகல வங்கிகளின் கிளைகளும், நாளை திங்கட்கிழமை முதல் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய வளவுக் கட்டடங்களில் இயங்க ஆரம்பிக்கும்.

இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, ஹட்டன் நாஷனல் வங்கி, வர்த்தக வங்கி ஆகியவற்றின் கிளைகளும், விலையுயர்ந்த பெறுமதியுள்ள முத்திரைகளை விற்பனை செய்யும் தபால் நிலையமும் இங்கு திறக்கப்பட்டுள்ளது.

பணம் கொடுக்கல் வாங்கலை இவ்வங்கிகள் மட்டுமே செய்யும் இவற்றுக்குச் செல்வதற்கு மாநகரசபை கட்டடத்தின் பின்புறத்தேயுள்ள கடற்கரை வீதி வழியாக வாசல் அமைக்கப்பட்டுள்ளது.

வங்கிகளின் வேலை நேரம் காலை 9 மணி முதல் 11 மணி வரையெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ்ப்பாணப்பகுதி காஸ் சிலிண்டர் தடையை ஒரு வாரத்தில் நீக்க பிரிகேடியர் உறுதி!

கடந்த இரண்டு மாதகாலமாக யாழ்- மாவட்டத்தில் காஸ் வெல்டிங் தொழிலுக்குப் பாவிக்கப்படும் ஒக்ஜிசன் காஸ் சிலிண்டர்கள் விநியோகத்திற்கு இருந்து வரும் தடையைத் தான் கொழும்புடன் தொடர்பு கொண்டு ஒரு வார காலத்திற்குள் நீக்க உரிய நடவடிக்கை எடுப்பதாக யாழ் மாவட்ட இணைப்பதிகாரி பிரிகேடியர் வணசிங்க நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை கோட்டையில் தம்மைச் சந்தித்த மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்க தூதுக் குழுவிடம் உறுதியளித்தார்.

மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கத்தின் தலைவர் திரு. வை. இராஜசுந்தரம் தலைமையில் சென்ற மேற்படி தூதுக்குழு காஸ் சிலிண்டர்கள் விநியோகத் தடையால் அத்தொழிலில் ஈடுபட்டுள்ள ஆயிரத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை இழந்திருப்பதையும் அதனால் அவர்களை நம்பிவாழும் குடும்பங்கள் பெரும் கஷ்டங்களை அனுபவிப்பதாகவும் இத்தடையால் இவ் ஒட்டுத் தொழிலுடன் சம்பந்தப்பட்ட கடைச்சல் தொழிற்சாலைகள் போன்றனவும் பாதிப்படைந்து காணப்படுவதுடன், விவசாயிகள் தமது இயந்திரங்களையும் உபகரணங்களையும் பழுது பார்க்க முடியாமல் அவதியுறுவதையும் இணைப்பதிகாரியின் கவனத்துக்குக் கொண்டு வந்தது. இக்காஸ் சிலிண்டர் விநியோகத்தடையால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களை விபரமாகக் கேட்டறிந்த இணைப்பதிகாரி கொழும்புடன் தொடர்பு கொண்டு இத்தடையை ஒரு வாரத்திற்குள் நீக்க தான் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

மேற்படி தூதுக்குழுவில் மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கத்தின் பொதுச் செயலாளர் திரு. சோ. தேவராஜா, யாழ்-கிளைத் தலைவர் டாக்டர் ஜி. செபஸ்தியாம்பிள்ளை, இணைச் செயலாளர் ஜி. ஆர். இராஜசிங்கம், காஸ் வெல்டிங் உரிமையாளர்- தொழிலாளர்கள் சார்பில் திரு. இ. செல்வநாயகம் ஆகியோர் இடம் பெற்றனர்.




✳ அரியாலை திருமகள் வீதியைச் சேர்ந்த அமிர்தலிங்கம் கலாவதி தம்பதிகளின் புதல்வன் விமல்ராஜ் இன்று தனது ஆறுவது பிறந்த தினத்தைக் கொண்டாடுகிறார்.

✳ மானிப்பாய் கிழக்கு இராசலிங்கம்- பூமணி தம்பதிகளின் மகள் வனஜா இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

✳ கச்சேரி புகையிரதநிலைய வீதி, நித்தியானந்தன்- நிர்மலாதேவி தம்பதிகளின் புதல்வன் துஷ்யந்தன் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

✳ கச்சேரி பெந்தகோஸ்லேன் ரட்ணராஜா- ராஜலட்சுமி தம்பதிகளின் புதல்வி கவீற்று இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

✳ உருத்திரபுரம் தோமஸ்-யசிந்தா தம்பதிகளின் மகள் அமலினி (அஜந்தா) இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

✳ கச்சேரி புகையிரத நிலைய வீதி மனோகரன் பவளம் தம்பதிகளின் புதல்விகள் பபிதா, கவிதா ஆகியோர் இன்று தமது ஒன்பதாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்கள்.

✳ சித்தன்கேணி கப்நகர் தங்கரத்தினம்- சச்சிதானந்ததேவி தம்பதிகளின் மகன் கலைச்செல்வன் இன்று தனது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

### பருத்தித்துறை பிரஜைகள் குழு அறிக்கை:

# சந்தர்ப்பத்தை பயன்படுத்தும் சமூக விரோதச் சக்திகள் பற்றி எச்சரிக்கை

அண்மைக் காலத்தில் பருத்தித்துறை நகரப் பகுதிகளில் அதிலும் கடற்கரைப் பகுதியை அண்மித்த பகுதிகளில், என்றுமில்லாத துன்பங்கள் நிகழ்ந்து விட்டன. இதனால் பெரும் பகுதி மக்கள் தங்கள் வீடு வாசல்களை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களில் வாழ்கிறார்கள். இந்த சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தி சில சமூக விரோத சக்திகள் இந்த வீடுகளில் களவாடுவதில் ஈடுபட்டு வருவதாக அறிகிறோம்.

பணயால் விழுந்தவனை மாடேறி மிதித்த நிலைக்கு, பாதிக்கப்பட்ட மக்களைத் தள்ளும் இந்த இழி செயலை எவரும் செய்யாதிருக்க அனைவரையும் விழிப்பாக இருக்கும்படி பருத்தித்துறை பிரஜைகள் குழு தயவாக வேண்டியுள்ளது. இந்தக் கும்பல் பருத்தித்துறைக்கு மேலும்வேண்டாத அனர்த்தங்கள் விளையலாம் என குழு எச்சரித்துள்ளது.

இரவு நேரங்களில் ஊரடங்கு நிலையைச் சாதகமாக்கி மிக அதிகமான அளவில் கிராமந்தோறும் மின் சாரம் களவாடப்படுவதால் சட்டரீதியான பாவனையாளர்களும் இருளில் தடுமாறும்படி சமூக விரோத சக்திகள் செய்து வருகின்றன. இதன் விளைவு எல்லை மீறினால் மின்மாற்றி வெடித்து எவருக்குமே மின்சாரம் கிடைக்காத நிலைஎழும்காலம் அதிக தூரத்தில் இல்லை எனவே சட்டவரம்புகளை மீறி மின் களவுசெய்யாதீர்கள் என்றும்பிரஜைகள் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

## இப்படியொரு தண்டனையா?

(புங்குடுதீவு)

புங்குடுதீவில் மின்விநியோகம் தொடர்ந்து ஸ்தம்பித்துள்ளது. கடந்த மூன்று வார காலமாக இந்நிலை நிலவுகிறது. இதனால் இங்குள்ள மக்கள் சொல்லொணா அவதியுறுகின்றனர்.

மின் விநியோகம் துண்டிக்கப்பட்ட நிலையிலிருப்பினும் மின்சார சபையிடமிருந்து மின் கட்டணம் அறவிடுவதற்குரிய பட்டியல்கள் வந்த வண்ணமிருக்கின்றனவாம். இது மின் பாவனையாளர்களுக்கு வழங்கப்படும் தண்டனையா? என்று இங்குள்ள மக்கள் வினவுகிறார்கள்.

## உதவி அரசாங்க அதிபர் உறுதி

(நீர்வேலி)

அச்செழு கிராம அபிவிருத்திச் சங்கப் பொதுக் கூட்டம் அச்செழு மத்திய மகாவித்தியாலயத்தில் செல்வி த. நல்லதம்பி தலைமையில் நடைபெற்றது. சிறப்புவிருந்தினர்களாக வலி. கிழக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. க. கிட்ணர் கிராமசேவையாளர் திரு. த. துரைசிங்கம், விசேடசேவை அலுவலர் திரு. ச. இரத்தினம் ஆகியோர் பங்குபற்றினர்.

சிறப்புச் சொற்பொழிவாற்றிய திரு. க. கிட்ணர் தனது உரையில், விரைவில் அச்செழு கிராமத்திற்கு தனி கிராம சேவையாளரை நியமிக்கவிருப்பதாகவும் அச்செழு மயானக் காணியில் அத்துமீறிக் குடியேறியோரை வேறு இடங்களில் குடியேற்ற நடவடிக்கை எடுப்பதாகவும் கிராம முன்னேற்ற சங்கத்திற்கு தனிக் கட்டிடம் ஒன்று அமைப்பதற்கு அநுமதி தருவதாகவும் உறுதியளித்தார்.

## அந்த இரு மணி நேரம்

(மருதங்கேணி)

சென்ற ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் மூன்று மணிதொடக்கம் மாலை ஐந்துமணிவரை இயக்கச்சிப் பகுதியில் பலத்த வெடிச் சத்தங்கள் கேட்ட வண்ணமிருந்தன. விமானம் ஒன்றும் தாளப்பறந்து பல வேட்டுக்களைத் தீர்த்தது.

கடல் பகுதியில் பல கப்பல்களின் நடமாட்டங்களும் காணப்பட்டன.

## விவசாயிகள் அடையாள அட்டை பெறுவது அவசியம்

(மிருசுவில்)

சாவகச்சேரி கமநலச்சேவை நிலைய எல்லைக்குட்பட்ட விவசாயிகள் தங்களுக்குரிய விவசாய அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி கமநலச்சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் திரு. ச. பரமசிவராஜா இதுபற்றி விடுத்துள்ள வேண்டுகோளில் வங்கிக் கடனுதவி. விதைநெல் வினியோகம், தென்னை வாழை மானியங்கள் என்பவற்றைப் பெறுவதற்கும், விவசாய அலுவலர்களுடனான தொடர்புகளை இலகுவாக்கிக் கொள்வதற்கும் விவசாய அடையாள அட்டை அவசியமெனவும் குறிப்பிட்டுள்ளார்.

இதுவரை தங்களுக்குக்குரிய விவசாய அடையாள அட்டையை பெற்றுக்கொள்ளாதவர்கள் கமநலச் சேவை நிலையத்தில் அவற்றை பெற்றுக் கொள்ளும்படியும் கேட்கப் பட்டுள்ளனர்.

## முதலாவது பிறந்த நாள்



**ஜீவிதன்**

நல்லூர் சிதம்பரநாதன்- கமலாதேவி தம்பதிகளின் புதல்வன் ஜீவிதன் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

## ஜூன் 21ல் கொடியேற்றம்

அளவெட்டி தெற்கு ஸ்ரீ முத்துமாரி அம்மன் வருடாந்த மகா உற்சவம் அடுத்த மாதம் 21ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. 30 திகதி தேரும், 31ம்திகதி தீர்த்தமும், ஆகஸ்ட் முதலாம் திகதி பூங்காவனமும் நடைபெறும்.

## நிர்வாகிகள் தெரிவு

(மருதங்கேணி)

வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா மகா வித்தியாலயப் பழைய மாணவர் சங்கப் புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவாகினர். தலைவர்: திரு. கே. அரியரத்தினம் (அதிபர்), உப-தலைவர்: செல்வி சுந்தராம்பாள், செயலாளர்: திரு. என். பழனிநாதன், உப-செயலாளர்; செல்வன் எஸ். மரியசீலன், பொருளாளர்; சி. பஞ்சாட்சரம், உப-பொருளாளர்: செல்வி ஏ. மரியசாந்தி.

எழுவர் செயற்குழு உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

## திருவிழாக்கள் நேர மாற்றம்

உசன் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் மகோற்சவம் நேற்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. நாட்டு நிலைமை காரணமாக திருவிழா நேரங்களில் மாற்றம் செய்யப்படலாம் எனவும், அடியார்களும் உபயகாரர்களும் நேர மாற்றத்திற்கு ஒத்துழைப்பு நல்கி திருவிழாக்களை நடாத்த உதவுமாறும் கேட்கப்பட்டுள்ளார்கள். 11ம் நாள் பூங்காவனத் திருவிழா நடைபெறும். வழமைபோல இரவு 7.00 மணிக்கு சுவாமி வசந்த மண்டபத்தை அடையும்.

## வரி விளம்பரம்

**பயிற்சி**

ரெலிவிசன், வீடியோ டைக்ரிப்பேயறிங், எலக்ரிக்கல் வயரிங், Hotel Management, French, Computer Programming வகுப்புக்கள் உடன் ஆரம்பமாகின்றன. Jaffna Technical Institute, ஸ்ரான்லி வீதி, (றெயில்வே கடவையருகாமை) யாழ்ப்பாணம்.

**விற்பனைக்கு**

வீட்டுத் தளபாடங்களும் தம்பூராவும் விற்பனைக்குண்டு
56, 3-ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

## முக்கிய அறிவித்தல்

எனது அன்பார்ந்த வாடிக்கையாளர்க்கு,

அருணாசலம் சண்முகம் மகாதேவா ஆகிய நான் எனது 65, பெரிய தெரு. என்ற விலாசத்திலுள்ள அடைவு கடையை 85-ம் ஆண்டு ஆனி 30-ம் திகதியுடன் மூடிவிடுவதற்குத் தீர்மானித்துள்ளேன். ஆனபடியால் தயவுசெய்து உங்கள் சிரமங்களைப் பாராது ஆனிமாதம் 25-ம் திகதிக்கு முன்னராக உங்கள் அடைவு நகைகளை மீட்டு எமக்கு ஒத்துழைப்பு நல்குமாறு மிகப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். தனித்தனியே அறிவிக்க முடியாமைக்கு வருந்துகிறேன்.

அ. ச. மகாதேவா

## ஈழமுரசு ஆசிரிய பீடம் பதவி வெற்றிடங்கள்

ஈழமுரசு அலுவலக ஆசிரிய பீடத்தில் கடமையாற்றுவதற்குப் பின்வரும் பதவிகளுக்கு உடனடியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

★ பயிற்சி உதவி ஆசிரியர்கள் (TRAINEE SUB - EDITORS)

★ அலுவலக நிருபர்கள்

★ யாழ்ப்பாண நகரப் பகுதியில் கடமையாற்றுவதற்குப் பகுதி நேர நிருபர்கள்.

தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் போதிய அறிவும், பத்திரிகைத் தொழிலில் அனுபவமும் ஆர்வமும் இருப்பவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

யாழ்ப்பாண நகரிலிருந்து மூன்று மைல் சுற்றாடலில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

என்வலப்பின் இடதுபக்க மேல் மூலையில் பதவியை குறிப்பிட்டு, தபால் மூலம், 31 - 5 - 85 க்கு முன்னர் கிடைக்குமாறு விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டும்.

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர்,
ஈழமுரசு,
37, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

# படுகொலைச் சம்பவங்கள் போதிக்கும் பாடம் என்ன?

★ சிவா பொன்னுத்துரை

நமது ஐக்கிய இலங்கை எங்கே சென்றுகொண்டிருக்கிறது? முடிவு; விடிவு ஏதுமில்லாத ஒரு இருண்ட; குழப்பமான பாதையில் சென்றுகொண்டிருக்கிறது. ஆம், இந்து சமுத்திரத்தின் மத்தியிலே மிதந்துகொண்டிருந்த அழகிய இலங்கை இன்று இரத்தச் சமுத்திரத்திலே மூழ்கிக் கொண்டிருக்கிறது. பௌத்த; இந்து; இஸ்லாமிய; கிறிஸ்தவ மதங்களினால் புனிதத்துவம் பெற்று புண்ணிய பூமியாக விளங்கிய இந்த மண் இன்று கொலைக்களமாகிக் கிடக்கிறது.

ஏன் இந்த நிலை ஏற்பட்டது? நம் நாட்டிற்கு அப்படி என்ன தான் வந்தது? பி.பி.சீ. வானொலி சொன்னதுபோல், ''இலங்கையில் இன்று நடப்பது அதிரடி பதிலடி; பதிலடி அதிரடி'' என்ற செயற்பாடே. அந்நிலையே இலங்கையின் இன்றைய படுபாதகமான நிலைக்கு அடிப்படைக் காரணமெனில் அது மிகையாகாது. தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் அந் நடவடிக்கையானது காணப்போகின்ற வெற்றிகரமான முடிவுகள் எதுவுமேயில்லை. மாருக பெரும் அழிவிற்குத் தான் வழிவகுக்கும் அண்மைக் காலச் சம்பவங்களை நாம் ஊன்றி நோக்குகையில் அவ்வுண்மை 'வெள்ளிடை மலையாய்ப்' புரிந்து விடும்.

அண்மையில் அநுராதபுரத்தில் நடைபெற்ற படுகொலைகளைத் தொடர்ந்து அதன் எதிரொலியாக தமிழ்ப்பகுதிகளில் நடைபெற்ற அப்பாவித் தமிழ் மக்களின் படுகொலைச் சம்பவங்கள் 'பழிக்குப்பழி' என்ற ஒரு நடவடிக்கையை எமக்குப் புலப்படுத்துகின்றது ஒரே வீட்டிற்குள் இருந்துகொண்டு இரு சகோதரர்கள் முட்டி மோதி 'பழிக்குப் பழி' என்ற வார்த்தையைப் பிரயோகிப்பார்களேயானால். நாம் அதனை எவ்வளவு தூரம் எள்ளி நகையாடுவோம்!

ஒரு குறிக்கோளையும் அதனையடைய ஒரு பாதையினையும் வகுத்துக்கொண்டு தீவிரவாத இயக்கங்கள் திடீர்த் தாக்குதல்களில் ஈடுபடுகின்றனர். இச்சந்தர்ப்பத்தில் தீவிரவாத இளைஞர்களின் மனோநிலை என்ன என்பதை அலசி ஆராய முற்படாமல் அவர்களிற்கு பயங்கரவாதிகள் பட்டம் சூட்டி, பயங்கரவாதம்தான் நாட்டின் முக்கிய பிரச்சினை எனவே அதனை ஒழிக்கவே இராணுவ நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்று நியாயப்படுத்தப்படுகிறது. (அக்கூற்றில் எவ்வளவு போலி; எவ்வளவு உண்மை என்பது உண்மையின் தரிசனங்களாக நாம் இன்றுவரை கண்டுகொண்டுதான் இருக்கிறோம்.) எனவே அவ் இராணுவ நடவடிக்கைப் பாய்ச்சல்களில் அப்பாவி மக்கள்தான் கொல்லப்படுகின்றனர்,

மொத்தத்தில் பார்க்கப்போனால் நம்நாட்டிற்குள் இருபெரும் பகுதிகளின் மோதல்களினாலும் அப்பாவிப் பொதுமக்கள்தான் கொல்லப்படுகின்றார்கள் என்பதனை யாருமே மறுத்துரைக்க முடியாது பொதுமக்களின் நன்மைகளுக்காக; துன்ப துயரங்களை நீக்குவதற்காக செயற்பட்டு வருகின்ற எவரும் அதனைச் சிந்திக்காமலிருக்க முடியாது. இரு பகுதிகளுமே இவ்வுண்மையை உணரவேண்டும்.

அநுராதபுரத்தில் கொல்லப்பட்ட அந்த அப்பாவிச் சிங்கள மக்கள் என்னென்ன எதிர்பார்ப்புகளுடன் நகரத்துள் நடமாடினார்களோ தெரியாது! ஆனால் அவர்களை கண்மூடித்தனமாகக் கொல்லப்பட்டு விட்டார்கள். அச்சம்பவத்தால் எத்தனை குடும்பங்களின் எதிர்கால வாழ்நிலை சூனியமாக்கப்பட்டிருக்கும் என்பது சொல்லாமலே புரியக்கூடியது. இராணுவச் சீருடையில் (அல்லது வேடத்தில்) அந்த வெறியாட்டத்தை நடத்தியவர்கள் யார்?

தமிழ்த் தீவிரவாதிகளே அதற்குப் பொறுப்பு என அரசு அறிவித்துள்ளது அதேவேளை தீவிரவாத இயக்கங்களின் முக்கிய நான்கு பிரிவுகள் கூட்டாக அக்குற்றச்சாட்டை மறுத்துள்ளமை யாவரும் அறிந்ததே. இதற்கிடையில் இன்னொரு முக்கிய தீவிரவாத இயக்கமொன்று அநுராதபுரச் சம்பவத்தைக் கண்டித்துள்ளது. எனவே அச்சம்பவங்களை (கொடூரமாக) நிகழ்த்தியவர்கள் யார் என்ற குழப்பநிலை இன்னும் எம்மத்தியில் இருந்துகொண்டே வருகிறது.

அச்சம்பவம் யாரால் நிகழ்த்தப்பட்டிருந்தாலும் ஒன்றை மட்டும் எம்மால் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும். படுபிற்போக்குத்தனம் கொண்ட; பொறுப்புணர்வற்ற ஒரு கும்பலினால் மேற்கொள்ளப்பட்ட அந் நடவடிக்கையானது மீண்டும் இந்நாட்டில் (ஒரு பாரிய முரண்பாட்டை தேசிய இனங்களிடையே ஏற்படுத்தி) இனக்கலவரமொன்றைத் தூண்டிவிடுவதன் மூலம் பெரும் அரசியல் குழப்பநிலையை ஏற்படுத்துவதற்கேயாகும். இந்நடவடிக்கையானது ஒரு அரசியல்; அறிவியல் வரட்டுத்தன்மை கொண்டதாகும்.

அக்கும்பல் எண்ணியது போன்று, நாட்டில் இனக்கலவரம் ஏற்படாதுவிடினும் அநுராதபுரச் சம்பவங்களின் மறுதலிப்பாக தமிழ்ப்பகுதிகளில் ஏராளமான கொலைகள் நடந்துவிட்டன இன்னும் மக்கள் பதற்றங்களிலிருந்து மீளவில்லை

கொலைப்பட்டியல் நம் நாட்டில் நீண்டுகொண்டே போகிறது. எத்தனை கொலைகள் நடந்து முடிந்துவிட்டன? எண்ணிலடங்காது.

பயங்கரவாதம் பயங்கரவாதம் என்று பலமுறை சொல்வதைவிட, பயங்கரவாதம் என்றால் என்ன? அது யாரால், எக்காரணத்தால் எவ்விடத்தில் ஏற்பட்டுள்ளது என்பதை நன்கு ஆராய்ந்துணர வேண்டும். இன்றேல் அதனை ஒழிக்க முடியாது.

— 4 ஆம் பக்கம் பார்க்க


ஷப்ரு யுனிக்கோ பினான்ஸ் லிமிடெட்

உங்கள் முதலீடுகளுக்கு 30% அதிஉயர் வட்டி ஷப்ரு தருகிறது

★ நிதி உதவி!

★ நிலையான வைப்பிற்கு அதிஉயர் வட்டி!

★ உழைக்கும்போதே சேமிப்பதற்கு புதியவழி!

★ தவணை முறை கொள்வனவு வசதி!

★ வெளிநாட்டு, உள்நாட்டு காசோலைகள் மூலமாகவும் நிலையான வைப்புக்கணக்கை (Fixed Deposit) ஆரம்பிக்கலாம்

★ மாதாந்த சேமிப்புத்திட்டம் உழைப்பாளர்களுக்கு ஒரு வரப்பிரசாதம்

★ முதலீடுகளுக்கு எதிராக கடன் வசதியுண்டு

★ எங்களிடம் முதலீடு செய்தவர்கள் முதலீடுகளுக்கு எதிராக தவணைமுறை கொள்வனவு செய்து கொள்ளலாம் அல்லது தவணைமுறை கொள்வனவு செய்பவருக்கு பிணை நிற்கலாம்




SHABRA

UNICO FINANCE LIMITED

207, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 22073

61, நியூ புல்லர்ஸ் வீதி கொழும்பு-4. தொலைபேசி: 589310

நிறுவனத்தின் நிதிநிலைமை

| நிதியாண்டு | 1981/1982 | 1982/1983 | 1983/1984 |
| --- | --- | --- | --- |
| முதலீடு | ரூ. 178 700/- | ரூ. 500,000/- | ரூ. 1000 000/- |
| ஒதுக்கீடு | — | 31.510/- | 321.810/- |
| வைப்பு முதல் | 1280, 760/- | 4236,969/- | 123,98 671/- |
| கடன் பெறு முதல் | — | — | — |
| வைப்பாளர்களுக்கு வட்டி வழங்குமுன் லாபம் | 191.019/- | 574,960/- | 24 77 997/- |
| வைப்பாளர்களுக்கு வழங்கிய வட்டி | 142 977/47 | 492,217/12 | 21,82,765/- |
| தேறிய லாபம் | 48.041/74 | 82,743/53 | 261.926/- |

31-03-85இல் மொத்த வைப்பு 300 இலட்சத்திற்கு மேல்

இயக்குநர்கள் - எஸ். பாலசுப்பிரமணியம் (F.B.I.மு), கே. சண்முகம், ஆர். பாலசுப்பிரமணியம்

ஈழமுரசு

## தேசிய பாதுகாப்பு நிதி வழங்காத 70 ஆசிரியர்களுக்கு இடமாற்றம்?

தேசிய பாதுகாப்புக்கு நிதி வழங்க மறுத்த எழுபது சிங்களமொழிமூல ஆசிரியர்கள் கஷ்டப் பிரதேசங்களுக்கும், தூர இடங்களுக்கும் உடனடி இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். மாத்தறை மாவட்டத்தில் ஹக்மனை கல்வி வட்டாரத்திலிருந்தே இவர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்க செயலாளர் திரு. எச். என். பெர்ணன்டோ கல்வி அமைச்சரிடம் புகார் செய்துள்ளார். ''தேசிய பாதுகாப்பு நிதி கட்டாய மானதல்ல, ஒவ்வொருவரும் விரும்பினல் மட்டும் அறவிடப்படும்'' என்று கல்வி அமைச்சு அறிவித்தபோதிலும் நிதி வழங்காத ஆசிரியர்கள் பழி வாங்கப்படுவதாகவும் இப்புகாரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வைத்திலிங்கம் விழாவில் "தர்மர்" பேச்சு:

# பிரதேச சுயாட்சியை வழங்க மறுப்பதன் மூலம் தமிழ்ஈழம் ஏற்படுவதற்கு வழிசமைக்கிருர்கள்!

இலங்கையில் சமஷ்டியை அல்லது பிரதேச சுயாட்சியை ஏற்படுத்துவதன் மூலம் இனங் களுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்த முடியும் என்று மானிப்பாய் தொகுதியின் எம். பியும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் முக்கியஸ்தரு மான திரு. வி. தர்மலிங்கம் தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கம்யூனிஸ்ட். கட்சியின் முக்கியஸ்தரான திரு. அ. வைத்திலிங்கத்தின் எழுப தாவது பிறந்ததின வைபவத்தில் கலந்துகொண்டு உரை யாற்றுகையில் இவ்வாறுகூறிய திரு. தர்மலிங்கம் சமஷ்டி, பின்னர் தனிநாட்டுக்கு வழி வகுக்கும் என்று சிலர் நினைக் கின்ருர்கள். ஆனல் உண்மை யில் இதனைக் கொடுக்காமல் விடுவதுதான் தனிநாடு ஏற்படு வதற்கு வழிசமைக்கும் என் றும் சொன்னுர்.

திரு. பொன். குமாரசாமி தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் திரு. தர்மலிங்கம் தொடர்ந்து பேசுகையில், இனப் பிரச்சினையை இந்த அர சாங்கம் தீர்க்க விரும்பினல், இந்நாட்டில் இரண்டு தேசிய இனங்கள் இருப்பதை முதலில் ஏற்றுக் கொண்டு அவற்றை எவ்வாறு ஒற்றுமையாக வாழ வைப்பது என்று ஆராயவேண் டும் என்று கூறினுர்.

திரு. வைத்திலிங்கம் இப் பிரச்சினையை ஒருபோதும் தமி ழர் பிரச்சினை என்று கருதிய தில்லை இதனை ஒரு தேசியப் பிரச்சினை என்றே அவர் கருதி யாகவும் திரு. தர்மலிங்கம் தெரிவித்தார்.

திரு. பொன். குமாரசாமி விழாவிற்கு தலைமை தாங்கி உரையாற்றுகையில், இங்கு இடம்பெற்றுவரும் கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற வற்றிலிருந்து தப்புவதற்கு அரசாங்கத்தை வலியுறுத்தக் கூடியவிதமாக ஓர் இயக்க மொன்று ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றும் இக் கூட் டத்தை இதற்கான ஓர் அத் திவாரமாகக் கொண்டு செயற் பட வேண்டும் எனவும் கூறி னுர்.

திரு. வைத்திலிங்கமும் இவ் வாருன குறிக்கோளுடனேயே இவ்விழாவை நடத்த விரும்பி னுர் எனவும், எவ்வித பயனு மற்ற விதத்தில் ஒரு விழா வாக இதனை அவர் கொண் டாட விரும்பவில்லை என்றும் கூறினுர்.

திரு. வைத்திலிங்கம் பதில ளித்து உரையாற்றுகையில், இனக்குரோதம் இப்பொழுது இலங்கையில் மூலை முடுக்கெல் லாம் வந்துவிட்டதெனவும், சிங்கள உழைக்கும் மக்களும் தமிழ் உழைக்கும் மக்களும் ஒன்று சேர்ந்தே இதனைத் தீர்க்க முடியும் எனவும் கூறி னுர்.

பேராசிரியர் கா. சிவத் தம்பி, திரு. முருகேசு ஆகி யோரும் உரையாற்றினுர்கள், திரு. விஜயானந்தன் நன்றி தெரிவித்து உரையாற்றினுர்.

---

படுகொலைச் .....

— 3 ஆம் பக்கத் தொடர்

பயங்கரவாதத்தை வெகு விரைவில் ஒழித்துக் கட்டு வோம் என்று கங்கணங்கட்டிக் கொண்டிருக்கும் அரசு தீவிர வாத இயக்கங்களுடன் பேச்சு வார்த்தை நடாத்தச் சம்மதித் துள்ளமை இக்காலகட்டத்தில் பெரியதொரு காரியமே. எனவே இந்த நல்ல சந்தர்ப் பத்தை நழுவவிடுதல் புத்திசா லித்தனமல்ல. அரசு—தமிழ்த் தலைவர்கள் பேச்சுவார்த்தை கள் தோல்விகளைத் தொடர்ந் தும் தழுவிய போதிலும், தீவிர வாத இயக்கங்களுடன் பேச்சு வார்த்தை நடாத்த அரசு முன் வந்திருப்பது இதுவே முதற் தடவை. இனப்படுகொலைகளை உடனடியாக நிறுத்த இது தவிர்த்த வேறு வழிகளே கிடை யாது. ஏனெனில் இனப்பிரச்சி னைக்கு அரசியல் தீர்வொன் றைக் காணும்படி உலக நாடு கள் வற்புறுத்துகின்ற இந்தச் சந்தர்ப்பத்தில், தீவிரவாதிகள் பேச்சுவார்த்தைகளுக்கு இணங்கவில்லை; எனவே அரசியல் தீர்வு காண்பதென்பது முடி யாத காரியமென அரசு கூற சந்தர்ப்பம் ஏற்பட்டுவிடுகிறது எனவே இங்கு அரசினல் மேற் கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகளைத் தட்டிக் கேட்க யாராலும் முடியாத நிலை இயல்பாகவே ஏற்பட்டு விடுகிறது.

---

சூருவளியால் ...

1ஆம் பக்கத் தொடர்

யட்டிருந்த பல படகுகள், வள்ளங்கள் அடித்துச் செல்லப்பட் டன. ஆயிரக்கணக்கானேர் அகதிகளாகியுள்ளனர்.

---

கொழும்பின்......

1ஆம் பக்கத் தொடர்

கொழும்பு சென்று, உறவினர் கள், நண்பர்கள் வீடுகளில் தங்கியிருந்த வடக்கு, கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த பல தமிழ் இளைஞர்களும் கைதானவர்க ளில் அடங்கியுள்ளதாக கூறப் படுகிறது.

---

இயக்கங்களின்...

ள்ள இப்பிரசுரத்தில், 1984 பிற்பகுதியிலிருந்து 'புலிகள்' அமைப்பு உட்பட மற்றைய மூன்று அமைப்புகளுடன் நிரந் தர இணைப்பு ஏற்படுத்த கழ கம் எடுத்துவந்த முயற்சிக ளும் விரிவாக விளக்கப்பட் டுள்ளது.

இப்போது ஏற்பட்டிருக்கும் ஒருமைப்பாடும், அதன் வளர் ச்சியும் சரியானதொரு நடை முறைத் திட்டத்தின் அடிப் படையில், மீண்டும் பிளவு ஏற்படாவகையில் வளர்த்தெ டுக்கப்பட வேண்டுமெனத் தாம் விரும்புவதாகவும் தமி ழீழ மக்கள் விடுதலைக் கழகம் இங்கு சுட்டிக்காட்டியுள்ளது.

---

## சைதாப்பேட்டை தீ விபத்து 500 வீடுகள் சாம்பராகின

(சென்னை)

சென்னை சைதாப்பேட்டை யில் அடுப்பிலிருந்து பறந்த தீப்பொறியினுல் ஐநூறுக்கும் அதிகமான குடிசைகள் எரிந்து சாம்பராகின.

நான்கு மாதக் குழந்தை, மூன்று பெண்கள் உட்பட ஏழு பேர் மரணமானுர்கள். பலர் காயமடைந்தனர்.

இச்சம்பவம் நடந்த இடத் திற்கு அதிகாரிகள் சென்று பார்வையிட்டதுடன் நிவா ரண வேலைகளும் மேற் கொள்ளப்படுகின்றன.

---

ஈழ அகதிகளு,,,

—1ஆம் பக்கத் தொடர்

ளிக்குள் கட்டி முடிக்கப்பட்டு விடும் என அறிவிக்கப்பட்டுள் ளது.

மேலும் இலங்கைத் தமிழ் அகதிகளின் வசதி கருதி தூத் துக்குடிப் பகுதியல் சுமார் ஆயிரம் வீடுகளும், மண்டபத் தில் மேலும் ஆயிரத்து ஐந் நூறு வீடுகளும் கட்டுவதற் கான திட்டமொன்றுபரிசிலனை செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## கவலையில்லை

சமீபத்தில் பிரிட்டனில் நடத்தப்பட்ட பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பின் படி ஆளுங்கட்சிக்கு ஆதரவு குறைந்து வருவது தெரிய வந் துள்ளது, இது பற்றி ஆளும் கட்சியான கன்சர்வேற்றிவ் கட்சியின் செல்வாக்குக்குறைவு தமக்கு கவலை தரவில்லையெ னப் பிரதமர் திருமதி மாகி ரெட் தட்சர் கூறியுள்ளார்.

---


## மரண அறிவித்தல்

### திருமதி நல்லமுத்து சின்னத்தம்பி

நயினுதீவைச் சேர்ந்த திருமதி நல்லமுத்து சின்னத் தம்பி காலமானுர். இவர் திருமதி வள்ளியம்மை குமார சாமி, வித்துவான் சி. குமாரசாமி, ஒய்வு பெற்ற உதவி அரசாங்க அதிபர் S. S. கதிரவேலு, திருமதி இராசம்மா புவனசுந்தரம் ஆகியோரின் அன்புத் தாயார் ஆவார். சமக்கிரியைகள் நயினுதீவு சல்லிவரவை மயானத்தில் 26-05-1985 ஞாயிற்றுக்கிழமை 4 மணிக்கு நடை பெறும். இவ்வறிவித்தலை உறவினரும், நண்பர்களும் ஏற்றுக் கொள்ளவும்.

---

தரமான

தங்க - வைர நகைகளை

எண்ணம் போல்

தெரிவுசெய்ய

யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்

நியூ ஆனந்தா ஜுவல்லர்ஸ்

(வின்ஸர் தியேட்டருக்கு முன்)

185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

---

I. C. M. A.

"எமது போதனையில் மாபெரும் சாதனை"

கடந்த I.C.M.A. பரீட்சையில் அகில உலகிலும், F.A.I. என்ற பாடத்தில் முதற் பரிசையும், மூன்ருவது பரிசையும் பெற்றவர்கள் எமது மாண வர்களே!

01-06-85 முதல்

பாடநெறிகள் ஆரம்பமாகின்றன

- I.C.M.A. Section A, B, Part I
- Chartered Preliminary
- I.A.A. Part I & II
- I.A.B. All stages

விரிவுரையாளர் குழு:

V. கருணநிதி, K. P. அரவிந்தன், ஜோய் டேவிட், S. R. உதயணன், Mrs. S. மூர்த்தி

குறிப்பு:

மாணவர் பாதுகாப்புக் கருதி, வகுப்புகள் யாவும் 212, கச்சேரி நல்லூர் வீதியில் நடைபெறும்.

விபரங்களுக்கு:

RAPID RESULTS INSTITUTE

58, Stanley Road
Jaffna.

"GOOD WINE NEEDS NO BUSH"


"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அசோசியேற்ஸ் ஸ்தாபனத்தாரால், 37, கண்டிவீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 26-5-85 ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23336.